பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 11 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Fenjal** புயல் இன்று மாலை காரைக்காலுக்கும் மாமல்லபுரத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
2. புயல் மழையால் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளில் உள்ள மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்கவைக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.
3. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
4. புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் நாளை 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்
5. சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa** ஜாலி – காயத்திரி கோபிச்சந்த் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Fenjal** புயல் இன்று மாலை காரைக்காலுக்கும் மாமல்லபுரத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த புயல் தற்போது சென்னைக்கு தென்கிழக்கே 90 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இந்த புயல் பத்து கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -42--- செகண்ட்*

இந்தப் புயல் காரணமாக தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு முதல். தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

சாலைகளில் மழைநீர் தேங்கியுள்ளதால்  வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளகியுள்ளனர்.

புயல் காரணமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதாகவும், தொடர்மழை மற்றும் புயல் காரணமாக, சென்னை விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேகா 52 செகண்ட்ஸ்)*

திருவள்ளுர் மாவட்டத்திலும் பலத்த காற்றுடன் தொடர்ந்து கனமழை பெய்து வருவதாகவும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ் பைட் - தனசேகரன்) ---45 செகண்ட்ஸ்)*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தீயணைப்பு மீட்புப் பணி வீரர்கள் உபகரணங்களுடன் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சிவக்குமார்) 36 செகணட்ஸ்)*

விழுப்புரம் மாவட்டத்தில் பிற்பகல் முதல் கனமழை பெய்து வருவதுடன் காற்றின் வேகமும் அதிகரித்து காணப்படுகிறது.

மாநில அமைச்சர் திரு பொன்முடி மரக்காணம் பகுதியில் உள்ள மீனவர் கிராமங்களை இன்று நேரில் பார்வையிட்டார். அங்குள்ள மக்களை நிவாரண முகாம்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) -46---- செகண்ட்*

**[]<<<>>>[]**

புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்ட, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் மின் கட்டணம் செலுத்துவதற்கான கால அவகாசம் அடுத்த மாதம் பத்தாம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை, அபராதம் ஏதுமின்றி அடுத்த மாதம் பத்தாம் தேதி வரை செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஃபெஞ்சல் புயலுக்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்துள்ளது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மாநில அவசரக் கால செயல்பட்டு மையத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் போதிய அளவில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

அவர்களுக்கு தேவையான உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று இரவு மிகக்கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தாம் அறிவுறுத்தி உள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

அந்தந்த மாவட்டங்களில் உள்ள பொறுப்பு அமைச்சர்களும் இப்பணிகளை கண்காணித்து வருவதாக அவர் கூறினார்.

சென்னை தியாகராயநகர் பகுதியில் தண்ணீர் தேங்குவதை தடுக்கும் பணி மாநகராட்சி சார்பில் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தற்போது தண்ணீர் வடிந்து கொண்டிருக்கும் நிலையில் அங்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.,

சென்னையில் எந்தெந்த பகுதிகளில் தண்ணீர் தேங்குமோ அந்த இடங்களில் எல்லாம் முன்கூட்டியே தேவையான முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு மு க ஸ்டாலின் கூறினார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புயல் மழை முன்னெச்சரிக்கை பணிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று பார்வையிட்டார்.

முன்னதாக சென்னை மாநகராட்சி வளாகத்தில் செயல்பட்டு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தையும் அவர் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட ஏழு மாவட்டங்களில் நாளை 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்,

மழை மற்றும் புயல் பாதிப்பால் காய்ச்சல், சளி, ரத்தக்கொதிப்பு, நீரழிவு போன்றவற்றை பரிசோதித்து அதற்கான சிகிச்சை வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

சென்னையில் 200 இடங்களிலும், மற்ற ஆறு மாவட்டங்களில் தலா 50 இடங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்படும் என்றும் திரு மா சுப்ரமணியன் கூறினார்.

[]<<<>>>[]

திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவில் 878 மாணவ மாணவியர் பட்டங்களைப் பெற்றனர்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் உலக பாரம்பரிய வாரத்தையொட்டி மாவட்டத்தைச் சேர்ந்த 150 ஆசிரியர்கள் கீழடிக்கு செல்லும் களப்பணத்தை ஆட்சியர் திரு இளம்பகவத் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மின் விநியோகம் சீராக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டத்தில் அடுத்த மாதம் 11-ஆம் தேதி மாவட்டமக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சையது மோடி பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa** ஜாலி – காயத்திரி கோபிச்சந்த் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.,

லக்னோவில் இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை – தாய்லாந்து இணையை 18-21, 21-18, 21-10 என்ற செட் கணக்கில் வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்

இன்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் சக வீராங்கனை உன்னத்திக்கூடாவை 21-12, 21-9 என்ற நேர் செட்டில் வென்று பி வி சிந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

***End of News***